உங்கள் பிள்ளையின்
திறன்களுக்கு ஏற்ப

# பாட அடிப்படையிலான தரவகைமை

தொடக்கப்பள்ளிகளுக்கானது

ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவம் மிக்கவர். ஒவ்வொரு பிள்ளைக்கும் வேறுபட்ட செயல்திறன்களும், திறமைகளும், தனித்திறன்களும் உள்ளன. பிள்ளைகளை வாழ்க்கைக்குத் தயார்செய்வதற்காக நம் பள்ளிகள் ஒவ்வொரு பிள்ளையின் வேறுபட்ட திறன்களுக்கு ஏற்ற சமச்சீரான கல்வியை வழங்குவதில் நம்பிக்கைகொண்டுள்ளது.

தரம் பிரித்தலின் மேம்படுத்தப்பட்ட நிலையாகப் பாட அடிப்படையிலான தரவகைமை (தொடக்கப்பள்ளிகளுக்கானது) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது பிள்ளை தன் உள்ளார்ந்த ஆற்றல்களைத் தனது விருப்பங்கள், திறமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் உணர்ந்துகொள்ள உதவும்.

## பாட அடிப்படையிலான தரவகைமை என்றால் என்ன? (தொடக்கப்பள்ளிக்கானது)

பாட அடிப்படையிலான தரவகைமை கூடுதல் நெகிழ்வுத்தன்மை அளிக்கும் வகையில் உங்கள் பிள்ளை அவர்தம் ஆற்றலுக்கு ஏற்ப வழக்கநிலையிலான பாடங்கள் அல்லது அடிப்படைநிலைப் பாடங்களைக்கொண்ட பாடத்தொகுப்பைத் தேர்ந்தெடுத்துப் பயில வாய்ப்பளிக்கிறது. எடுத்துக்காட்டுக்கு, உங்கள் பிள்ளை ஆங்கிலத்திலும் தாய்மொழியிலும் சிறப்பாகச் செய்து, அவருக்கு, கணிதத்திலும், அறிவியலிலும் அதிகப்படியான ஆதரவு தேவைப்பட்டால், முதல் இரண்டு பாடங்களை வழக்கநிலையிலும், மற்றவற்றை அடிப்படை நிலையிலும் தெரிவு செய்யலாம்.

இவ்வாறான விருப்பத்தெரிவு உங்கள் பிள்ளை சிறப்பாகச் செய்யக்கூடிய பாடங்களில் கவனம் செலுத்தவும் சுமாராகச் செய்யக்கூடிய பாடங்களில் நல்ல அடித்தளத்தை அமைத்துக்கொள்ளவும் உதவும்.

## பாட அடிப்படையிலான தரவகைமையும் (தொடக்கப்பள்ளிக்கானது) உயர்நிலைப்பள்ளிக்கான மாணவர் சேர்க்கையும்: இவை எவ்வாறு தொடர்புடையவை?

உயர்நிலைப்பள்ளிக்குத் தேர்ச்சி பெற்றுச் செல்வது என்பது உங்கள் பிள்ளை தொடக்கப்பள்ளி இறுதியாண்டு தேர்வில் (PSLE) பெறும் மதிப்பெண்ணைப் பொறுத்ததாகும். உங்கள் பிள்ளையின் PSLE மதிப்பெண் கணக்கீடு செய்யப்படும் போது வழக்கமான மற்றும் அடிப்படையான பாடங்கள் தொடர்பான வேறுபட்ட எதிர்பார்ப்புகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இந்தப் பாடங்களில் சிறப்பாகச் செய்தால் உயர்நிலைப்பள்ளியில் அவர் உயர்நிலையிலான விருப்பத்தெரிவுகளைத் தேர்ந்தெடுத்துப் பயிலலாம்.

அடிப்படைநிலையில் பாடங்களை வழங்குவது உங்கள் பிள்ளைக்குச் சாதகமற்றதாக இருக்காது. இந்தப் பாடங்களில் அவர்தம் அடித்தளத்தைத் தகுந்த முறையில் வளர்த்துக்கொள்வதில் கவனம் செலுத்தவும், உயர்நிலைப்பள்ளிக்குத் தேர்ச்சி பெற்றுச் செல்வதற்குத் தயார் செய்துகொள்ளவும் மாணவருக்கு இது உதவும்.



## எவை நடப்பிலிருக்கும் சில தெரிவுகள்?

| உங்களுடைய பிள்ளை (P4 தேர்வில்) | உங்களுடைய பிள்ளை பின்வருவனவற்றைத் தேர்ந்தெடுக்கப் பரிந்துரைக்கப்படலாம் |
|---|---|
| 4 பாடங்களிலும் தேர்ச்சி பெற்றுத் தாய்மொழியில் சிறந்து விளங்கினால் | 4 வழக்கநிலைப் பாடங்கள் + உயர்தாய்மொழி |
| 4 பாடங்களில் தேர்ச்சி பெற்றால் | 4 வழக்கநிலைப் பாடங்கள் |
| 3 பாடங்களில் தேர்ச்சி பெற்றால் | 4 வழக்கநிலைப் பாடங்கள் |
| 2 அல்லது அதற்கும் குறைவான பாடங்களில் தேர்ச்சி பெற்றால் | 4 வழக்கநிலைப் பாடங்கள் அல்லது |
| | 3 வழக்கநிலைப் பாடங்கள் + 1 அடிப்படைநிலைப் பாடம் அல்லது |
| | 2 வழக்கநிலைப் பாடங்கள் + 2 அடிப்படைநிலைப் பாடங்கள் அல்லது |
| | 1 வழக்கநிலைப் பாடம் + 3 அடிப்படைநிலைப் பாடங்கள் அல்லது |
| | 4 அடிப்படைநிலைப் பாடங்கள் |

## பாட அடிப்படையிலான தரவகைமை (தொடக்கப்பள்ளிகளுக்கானது) எவ்வாறு செயற்படுத்தப்படுகிறது?

### தொடக்கநிலை 4-இல்

**மாணவர்கள் பள்ளி சார்ந்த தேர்வுகளுக்கு அமர்வார்கள்**

மாணவரின் தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையில் பள்ளியானது அவர்களுக்குப் பாடத்தொகுப்பு ஒன்றைப் பரிந்துரைக்கும். பெற்றோர் விருப்பத்தெரிவுப் படிவத்தில் விருப்பப் பாடத்தொகுப்பைத் தெரிவு செய்வர்.

### தொடக்கநிலை 5-இல்

**ஆங்கிலம், கணிதம், அறிவியல், தாய்மொழிப் பாடங்கள் சாதாரணநிலை, அடிப்படைநிலைகளில் வழங்கப்படுகின்றன.**

மாணவர்கள் தங்கள் தாய்மொழியில் நல்ல திறன்களை வெளிப்படுத்தினால், அவர்களுக்கு உயர்தாய்மொழிப் பாடங்களும் வழங்கப்படுகின்றன.

ஆண்டு இறுதியில், பள்ளி தற்போதைய பாடத்தொகுப்பில் மாணவரது செயல்திறனை மதிப்பிடும். தேவை ஏற்படின் மாணவர் எடுக்கும் வழக்கநிலை, அடிப்படைநிலை பாடங்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் செய்யப்படும்.

### தொடக்கநிலை 6-இல்

**பள்ளி தீர்மானிக்கும் பாடத் தொகுப்பை மாணவர் பயின்று தொடக்கநிலை 6-இன் இறுதியில் தொடக்கப்பள்ளி இறுதியாண்டுத் தேர்வுக்கு அமர்வார்.**

## தங்களுக்கு உதவ நாங்கள் காத்திருக்கிறோம்

உங்கள் பிள்ளையின் தேவைகளுக்கும் திறன்களுக்கும் ஏற்பப் பாடத்தொகுப்புகளைப் பரிந்துரைக்கப் பள்ளிகள் உதவும்.

பாட அடிப்படையிலான தரவகைமை குறித்துத் தங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின் உதவி பெறத் தங்கள் பிள்ளையின் பள்ளியை அணுகுங்கள்.


www.moe.gov.sg/education/primary/subject-based-banding-(primary)

www.facebook.com/moesingapore

contact@moe.gov.sg

6872 2220

Ministry of Education
SINGAPORE



அக்டோபர் 2017- இந்தச் சிற்றேட்டில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை ஆகும்.

தயாரிப்பு: தொடர்பினைப்பு ஈடுபாட்டுக் குழு, கல்வி அமைச்சு